1982 பிப்ரவரி 5]

தான் கடைசியாக படகுகளை பறிமுதல் செய்யும் பணியை செய்கிறார்கள். வட்டியை மட்டும் வசூலிப்பது தவணை முறையை நீட்டித்துத் தருவது போன்றதல்லாமல் வேறு வழிகளிலும் அவர்களுக்கு பல சலுகைகள் வழங்கிய பிறகே, அப்போதும் பணம் கட்டத் தவறுவதினால்தான், கடைசி நடவடிக்கையாக படகுகளை பறிமுதல் செய்யும் வேலைகள் செய்யப்படுகிறது. இந்தக் கேள்வியை தனிக் கேள்வியாகப் போட்டால் இன்னும் பல விவரங்களைத் தர இயலும்.

Construction of tenements for fishermen at Velanganni.

*Q. No. 42—Thiru R. UMANATH : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(a) Whether the Government have received a memorandum dated 1—7—1980 from the fishermen of Velanganni, Velanganni Post, Nagapattinam Taluk regarding construction of tenements for 146 fishermen,

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும் (ஆ) வேளாங்கண்ணி மீனவர்களிடமிருந்து வீடு கட்ட கோரிக்கை வரவில்லை. எனினும் மீனவர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தின்கீழ் 1978–79 ஆம் ஆண்டில் 130 வீடுகள் கட்டவும், 1979–80 ஆம் ஆண்டில் 16 வீடுகள் கட்டவும் அரசு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, ஆணையிட்ட பிறகு, அந்த வீடுகட்டும் திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகள் எத்தனை மீனவர்களை அக்காமடேட் செய்யும், அவைகளைக் கட்டுவதற்கான ஏற்பாடுகள் எந்த ஸ்டேஜில் இருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த திட்டத்தின் கீழ் 146 வீடுகள் கட்ட திட்டமிட்டு, 130 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, முடியும் தருவாயின் உள்ளன. 16 வீடுகளை இனிமேல் கட்டுவதற்கான பணி தொடங்கப்பட்டிருக்கிறது. இது ஆதி திராவிட நல வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டு வருகிறது. விரைவில் கட்டி முடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

[5 பிப்ரவரி 1982

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, அந்த வீடுகளை மீனவர்களுக்கு வாடகைக்கு விடுகிறீர்களா அல்லது இறுதியாக நிரந்தரமாக அவர்களே வைத்துக் கொள்ளும் திட்டத்தின் கீழ் கட்டப்படுகிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மீனவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் வசிக்கின்ற வீடுகளுக்கு வாடகை வசூலிக்கப்படுவது இல்லை. ஆனால் அவ்வீடுகள் அரசின் பெயரில்தான் இருக்கின்றன. அவர்கள் இலவசமாக குடியிருந்து வருகிறார்கள்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வாணியம்பாடி நகர மக்களுக்கு பட்டா வழங்குதல்.

*வினா எண் 43—திரு. ந. குலசேகர பாண்டியன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம் வாணியம்பாடி நகரத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பட்டா வழங்கப்பட்டு இன்னும் பட்டாதார்களுக்கு நிலம் வழங்கப்படாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) மற்றும் (ஆ): 1,364 பேர்கள் பாதிக்கப்பட்டார்கள். 1,223 நபர்களுக்கு பட்டா கொடுக்கப்பட்டுள்ளது.

திரு. இல. பலராமன் : பட்டா கொடுக்கப்பட்ட இடம் வசதியான இடம் அல்ல. அது மேட்டுப்பாங்கான மலைப் பிரதேசமாகையால் அந்த மக்கள் நகர்ப்புறத்திற்கு அருகாமையில் உள்ள நிலத்தைக் கோரி இருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படிப்பட்ட நிலத்தைக் கொடுக்க வேண்டும் என்று பொது மக்களும் மற்றும் அரசியல்வாதிகளும் கோரி இருப்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அதுகுறித்து அரசு என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அந்த இடத்தை வருவாய்த்துறை அமைச்சர் நேராகச் சென்று பார்த்து அவர்களுக்கு எந்த இடத்தைக் கொடுப்பது என்று பார்த்து உள்ளூரில் கொடுக்கலாம் என்றால் அங்கே நிலம் இல்லாத காரணத்தாலும், மேலும், ஆற்றில் வெள்ளம்